

# தியாகச் செம்மல்
# வ.உ.சிதம்பரனார்

காங்கிரஸ் மகாசபையின் தீவிர வாதிகளின் அணியைச் சேர்ந்தவர் வ. உ. சிதம்பரனார். இவருடைய செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்வதுகண்டு அஞ்சிய அந்நிய ராட்சி, வ. உ. சிதம்பரனாரை கைது செய்து வழக்குத் தொடுத்தது. வழக்கு விசாரணைகள் எல்லாம் கேலிக் கூத்துகளாக நடந்தன.

ஆனாலும் நீதிபதி பின் ஹே என்பவர், சிதம்பரனார் குற்றவாளியெனத் தீர்மானித்து அரச நித்தனைக் குற்றத்திற்காக இருபது ஆண்டு தீவாந்தரத் தண்டனையும், சிவாவுக்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காக மேலும் இருபது ஆண்டு தீவாந்தரத் தண்டனையும் விதித்தார். இரண்டு தண்டனைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக (நாற்பது ஆண்டுகள்) அனுபவிக்க வேண்டுமெனக் கூறினார். அத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்த பிறகு, ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்த பிறகு அந்தமான் சிறைவாசத் தண்டனை ஆறு ஆண்டுக்கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

சிதம்பரனார் தமது தண்டனைக் காலத்தைக் கோயமுத்தூர், கண்ணனூர், சிறைகளில் கழித்தார். விடுதலை வீரர் வ. உ. சிதம்பரனாருக்கு கடுமையான வேலைகள் செய்யும்படி கட்டளையிட்டனர். மாடுபோல செக் கிழுக்கச் செய்தனர். ''மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும் நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ' என்று இறைவனிடம் மனங்குமுறி முறையிட்டார் பாரதியார்.

1912 ஆம் ஆண்டில் வ. உ. சி. விடுதலையானார். இராஜத்துவேஷக் குற்றத்திற்குத் தண்டனை பெற்றதன் காரணமாக வ. உ. சி. யின் வழக்கறிஞர் 'சன்னத்து' பறிமுதலாயிற்று. பின்னர் பறிக்கப்பட்ட சன்னத்து திரும்பி தரப்பட்டது. அதனால் 1922-ஆம் ஆண்டில் மீண்டும் வழக்கறிஞரானார்.

வ. உ. சி. ஆறு வருட காவல் தண்டனை, அக்காலத்தில் அடைந்தார். இக்காலத்தில் 60,000 பேர்கள் ஜெயிலுக்குப் போவது சரி. அக்காலத்தில் ஒரு சிதம்பரம் பிள்ளை ஜெயிலுக்குப் போவதும் சரி.

—தமிழ்த் தென்றல் திரு. வி. க.

நமது நாட்டின் விடுதலை வரலாற்றின் விடிவெள்ளி-

தியாக சீலர்களில் தலைசிறந்த செம்மல்—

பழந்தமிழ் இலக்கியங்களில் ஈடுபாடு கொண்ட தமிழ்ப் பெரும் புலவர்—

அறிவு, ஆற்றல், ஆண்மை, தியாகம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய பெருமகன்—

'தென்னாட்டுத் திலகர்' என்று எல்லாராலும் கொண்டாடப்பட்ட விடுதலை வீரர், தேசபக்தர், வ. உ. சிதம்பரனார் அவர்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் என்னும் சிற்றூரில் உலகநாத பிள்ளை, பரமாயி என்ற பெற்றோருக்கு, 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ஆம் நாள் வியாழக்கிழமை தோன்றினார்.

இளமையிலேயே கல்வியிலும் தமிழிலும் நாட்டங் கொண்டு தூத்துக்குடி செயிண்ட் பிரான்சிஸ் சேவியர் பள்ளியிலும் நெல்லை இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்றார். 1895-ஆம் ஆண்டில் வழக்கறிஞர் விருதுபெற்று தூத்துக்குடியில், வழக்கறிஞர் தொழில் தொடங்கினார். வழக்கறிஞர் தொழிலில் பெருஞ்செல்வத்தை ஈட்டுமளவுக்கு புகழுடன் விளங்கினார். ஆனால் வருமானம் ஒன்றையே பெரிதாக எண்ணாமல், ஒழுக்கம், பிறர்நலம் பேணுதல், வாய்மை இவற்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சியினால் அடிமைப் படுத்தப்பட்ட நம்நாட்டு மக்களின் உரிமைகள் பறிக்கப் படுவதை கண்டு மனம் வருந்தி அரசியலில் ஈடுபட்டார்.

ஆங்கிலேயருடைய கடல் ஆதிக்கத்தைக் குறைக்க வேண்டி, தூத்துக்குடியில் இந்திய வணிகரின் ஆதரவு கொண்டு 1906 ஆம் ஆண்டில் சுதேசிக் கப்பல் (சுதேசி ஸ்டீம் நாவிகேஷன்) கம்பெனி ஒன்றைத் தோற்றுவித்தார். தொடக்கத்தில் சுதேசிக் கப்பல் கம்பெனியார் சொந்தத்தில் கப்பல் வாங்கவில்லை. குத்தகைக்குக் கப்பல்களை வாங்கி ஓட்டினர். பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியார் தூண்டுதலின் காரணமாக குத்தகைக்கு கொடுத்தோரும் ...களை திரும்பப் பெற்றனர். இந்நிலையில் பம்பாய்

XVc:76




கப்பலை யோட்டிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன்—ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.

மஞ்சிலா வான மதியின் ஒளிபோல
விஞ்சிநீ டுழி விளங்குகவே—வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரன் மெய்ப்புகழ்தான்
மக்களிடை ஓங்கி வளர்ந்து.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

எல்லாரும் தேசபக்தர் இந்த நாளில்
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்பார்
சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணுத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்த நாளில்
வல்லாளர் சிதம்பரனுர் சிறையிற் பட்ட
வருத்தமெலாம் விரித்துரைத்தால் வாய்விட் டேங்கிக்
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டிக்
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்

—நாமக்கல் கவிஞர்

வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002

சென்று 'காலியோ' 'லாவோ' என்னும் இரண்டு கப்பல் களை வாங்கிக் கொண்டு தூத்துக்குடிக்குத் திரும்பினர் வ. உ. சிதம்பரனர்.

ஒரே காலத்தில் இருபெரும் கப்பல்களை விலைக்கு வாங்கித் தமிழகம் கொண்டுவந்த வீரச்சிதம்பரனரை இந்தியப் பத்திரிகைகள் பாராட்டின.

சுதேசிக் கப்பல் கம்பெனியின் செல்வாக்கு பெருகு வதைக் கண்ட வெள்ளையர்கள் துரைத்தனம் பல்வேறு சூழ்ச்சிகளில் ஈடுபட்டு சுதேசி கப்பல் கம்பெனியை நசுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது.

இந்தியாவில் தொழிலாளர் நலனுக்காகப் போராடி தொழிற்சங்க அமைப்புகளைத் தோற்றுவித்த முன்னோடி களில் வ. உ. சிதம்பரனரும் ஒருவர்.

விவசாய வளர்ச்சிக்காக சென்னை விவசாய கைத் தொழில் சங்கம் என்ற அமைப்பையும் வ. உ. சிதம்பர னர் தோற்றுவித்தார். தூத்துக்குடியில் தருமசங்க நெசவுச்சாலை, தேசியப் பண்டகசாலை போன்ற அமைப்பு களை நிறுவினர்.

மக்களிடையே சுதேசிப் பொருள்களை வாங்கும் உணர்வை பரப்பிட, 'சுதேசிப் பிரச்சார சபை' என்ற அமைப்பையும் நிறுவினர்.

நெல்லைச் சீமை மக்களால் அன்புடன் வந்தேமாத ரம் பிள்ளை, சுதேசிப் பிள்ளை என்று அழைக்கப்பட்டார். தூத்துக்குடியில் வீதிக்கு வீதி கூட்டங்கள் போட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்க்குமாறு மக்கள் உள்ளத்தே வீரக்கனலை மூட்டினர். மேலும் திருநெல்வேலியில் 'தேசா பிமானசங்கம்' நிறுவி, அதன் மூலம் பொதுமக்களுக்கு சுதேசிப்பற்று, அந்நியச் சாமான் விலக்கு, தேசியக் கல்வி ஆகியவற்றின் அவசியத்தை விளக்கிப் பிரச்சாரம் செய் தார்.

**கோயம்புத்தூர் சிறைச்சாலையைப் பார்க்க போகிறவர்களில் யார்தான் நமது தக்ஷிண தேசாபிமானச் சிங்கமான ஸ்ரீலஸ்ரீ சிதம்பரம் பிள்ளையைப் பற்றிச் சிந்தியாமல் இருக்க முடியும்.**

**—கவியரசர் பாரதியார்.**

1927-ஆம் ஆண்டில் காங்கிரஸில் பிரவேசித்தார். அவ்வாண்டில் நடைபெற்ற சேலம் மாவட்ட மூன்றுவது அரசியல் மாநாட்டுக்குத் தலைமையேற்ருர். லோக மான்ய பாலகங்காதர் திலகர் காட்டிய தேசிய பாதையில் நடைபயின்று வந்த சிதம்பரனருக்கும் அண்ணல் காந்தியடிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

1914-ஆம் ஆண்டு முதல் 1936-ஆம் ஆண்டுவரை அண்ணல் காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தபொழுது எல்லாம் அவரை வ. உ. சிதம்பரனர் சந்தித்திருக்கின்ருர். கோவையில் வ. உ. சி. இல்லத்தில் தங்கி உணவு உண்டார் அண்ணல் காந்தியடிகள்.


தென்னுப்பிரிக்காவிலிருந்த காந்தியடிகள் வ. உ. சிதம்பரனருக்கு விதிக்கப்பட்ட கொடுந்தண்டனையைக் கேட்டு வருந்தினர்.

இறுதிநாட்களில் தமிழிலக்கிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்ட வ. உ. சிதம்பரனர், 1936-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18-ஆம் நாள் நள்ளிரவில் மறைந்தார்கள்.

தேசபக்தி மிகுந்திருந்த சிதம்பரனர், இறுதி நேரத்தில் கவியரசர் பாரதியாரின் ''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தது மிந்நாடே' என்ற பாடலையும், ''என்று தணியு மெங்கள் சுதந்தரதாகம்' என்ற பாடலையும் கேட்டுக் கொண்டே உயிர்நீத்தார்.

வ. உ. சிதம்பரனர் தேசபக்தியின் அடையாளம். தியாகத்தின் திருவுருவம். நாட்டின் நல்வாழ்வுக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்ட அறநெறிச் செம்மல். அத்தியாகமூர்த்தியை நினைவு கூர்வோம். நாட்டின் நல்வாழ்வுக்காக பாடுபடுவோம்!

வாழ்க வ. உ. சியின் புகழ்!





எண்ணரிய துன்பங்கள் எய்தியுள வெஞ்சிறையை
நண்ணிடினும் நானஞ்சேன்; நாவாயின்—எண்ணரியா(து)
என்னோரென் தாள்நிதியை ஈயாதெனக் கொடுக்கச்
சொன்னாலும் யானஞ்சேன் சோர்ந்து

என்மனமும் என்னுடலும் என்சுகமும் என்அறமும்
என்மனையும் என்மகவும் என்பொருளும்—என்மனமுங்
குன்றிடினும் யான்குன்றேன்; கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து.

—வ. உ. சிதம்பரனார்

# வ. உ. சி. அவர்களின் தமிழ்ப்பணி....

## எழுதிய நூல்கள் :

1. மெய்யறிவு
2. மெய்யறம்
3. எனது பாடல் திரட்டு
4. வ. உ. சி. கண்ட பாரதி
5. சுயசரிதை.

## மொழிபெயர்ப்பு நூல்கள் :

1. மனம்போல வாழ்வு
2. அகமே புறம்
3. வலிமைக்கு மார்க்கம்
4. சாந்திக்கு மார்க்கம்

(ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு ஆக்கப்பட்டவை)

## உரை எழுதிய நூல்கள் :

1. இன்னிலை
2. திருக்குறள்
3. சிவஞான போதம்.

## பதிப்பித்த நூல்கள் :

1. தொல்காப்பியம்

— எழுத்ததிகாரம் [இளம்பூரணர் உரை]

2. தொல்காப்பியம்

— சொல்லதிகாரம் [இளம்பூரணர் உரை]

3. சிவஞான போதம்

## அச்சு வடிவில் வந்த அரசியல் சொற்பொழிவு :

"எனது அரசியல் பெருஞ்செயல்"

## நடத்திய ஏடுகள் :

1. விவேகபாநு
2. தமிழ் நேஷனல் பத்திரிகை
3. இந்துநேசன்.

## அச்சில் வராத நூல்கள் :

1. அழகும் ஆரோக்கியமும்
2. ஆயுளை நீடிக்கும் ஆறு
3. ஊழை வெள்ள உபாயம்
4. சிவ மதம்
5. விஷ்ணு மதம்
6. புத்த மதம்
7. இஸ்லாம் மதம்
8. கிறிஸ்து மதம்
9. மனித மதம்
10. முக்தி நெறி
11. The Universal Scripture
12. திருக்குறள் - மணக்குடவர் உரை [பொருள்]
13. திருக்குறள் - மணக்குடவர் உரை [இன்பம்]
14. திலக மகரிஷி [இலங்கையிலிருந்து வெளி வரும் 'வீரகேசரி' நாளிதழின் ஞாயிறு மலரில் $1\frac{1}{2}$ ஆண்டுக் காலம் எழுதிய தொடர் கட்டுரை ].

காங்கிரஸ் மகாசபையின் தீவிர வாதிகளின் அணியைச் சேர்ந்தவர் வ. உ. சிதம்பரனுர். இவருடைய செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்வதுகண்டு அஞ்சிய அந்நிய ராட்சி, வ. உ. சிதம்பரனுரை கைது செய்து வழக்குத் தொடுத்தது. வழக்கு விசாரணைகள் எல்லாம் கேலிக் கூத்துகளாக நடந்தன.

ஆனுலும் நீதிபதி பின் ஹே என்பவர், சிதம்பரனுர் குற்றவாளியெனத் தீர்மானித்து அரச நித்தனைக் குற்றத் திற்காக இருபது ஆண்டு தீவாந்தரத் தண்டனையும், சிவாவுக்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காக மேலும் இருபது ஆண்டு தீவாந்தரத் தண்டனையும் விதித்தார். இரண்டு தண்டனைகளையும் ஒன்றன்பின் ஒன்ருக (நாற்பது ஆண்டுகள்) அனுபவிக்க வேண்டுமெனக் கூறினுர். அத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்த பிறகு, ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்த பிறகு அந்தமான் சிறை வாசத் தண்டனை ஆறு ஆண்டுக்கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

சிதம்பரனுர் தமது தண்டனைக் காலத்தைக் கோயமுத்தூர், கண்ணனூர், சிறைகளில் கழித்தார். விடுதலை வீரர் வ. உ. சிதம்பரனுருக்கு கடுமையான வேலைகள் செய்யும்படி கட்டளையிட்டனர். மாடுபோல செக் கிழுக்கச் செய்தனர். ''மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும் நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ' என்று இறைவனிடம் மனங்குமுறி முறையிட்டார் பாரதியார்.

1912 ஆம் ஆண்டில் வ. உ. சி. விடுதலையானுர். இராஜத்துவேஷக் குற்றத்திற்குத் தண்டனை பெற்றதன் காரணமாக வ. உ. சி. யின் வழக்கறிஞர் 'சன்னத்து' பறிமுதலாயிற்று. பின்னர் பறிக்கப்பட்ட சன்னத்து திரும்பி தரப்பட்டது. அதனுல் 1922-ஆம் ஆண்டில் மீண்டும் வழக்கறிஞரானுர்.

**வ. உ. சி. ஆறு வருட காவல் தண்டனை, அக்காலத்தில் அடைந்தார். இக்காலத்தில் 60,000 பேர்கள் ஜெயிலுக்குப் போவது சரி. அக்காலத்தில் ஒரு சிதம்பரம் பிள்ளை ஜெயிலுக் குப் போவதும் சரி.**

**—தமிழ்த் தென்றல் திரு. வி. க.**